தினத்தந்தி திருச்சி 4-2-2025 9

### இந்திய மேலாண்மை நிறுவனம்

# ஆஸ்திரேலியா பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

திருச்சி, பிப்.4-

திருச்சி இந்திய மேலாண்மை நிறுவனத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் திருச்சி இந்திய மேலாண்மை நிறுவனத்தின் இயக்குனர் பேராசிரியர் பவன் குமார் சிங் மற்றும் ஆஸ்திரேலியாவின் பாண்ட் பல்கலைக்கழகத்தின் இயக்குனர் லிசா கோவன் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் 2 நிறுவனங்களுக்கிடையில் கல்வி ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் திருச்சி இந்திய மேலாண்மை நிறுவனம் மற்றும் ஆஸ்திரேலியாவின் பாண்ட் பல்கலைக்கழகம் மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்ற திட்டங்கள், கூட்டு ஆராய்ச்சி முயற்சிகள் மற்றும் கூட்டுப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் பிற கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும். மேலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான உலகளாவிய வெளிப்பாட்டை மேம்படுத்தும் மற்றும் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் சிறந்து விளங்குவதில் இரு நிறுவனங்களின் பங்கு அதிகரிக்கும். இந்த நிகழ்ச்சியில் மாணவர் சேர்க்கை மேலாளர் ஹீனா கவுசர் மற்றும் பேராசிரியர் அனிர்பன் சோம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

INDIAN INSTITUTE OF MANAGEMENT
04 FEB 2025
TIRUCHIRAPPALLI - 24

Source: Daily Thanthi

Date: 04.02.2025

Page: 09